ஜம்பு நதி மேல்மட்டக் கால்வாய் அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் தனது பொற்கரங்களால் அன்றைக்கு அடிக்கல் நாட்டினார்கள். அதன்பின் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் தென்காசி சட்டமன்ற உறுப்பினரான துரோகி கருப்பசாமி பாண்டியன் அவர்களும், மணல் கொள்ளையன் முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன் அவர்களும் சேர்ந்து இந்தத் திட்டத்தை ஓரம் கட்டிவிட்டார்கள். ஆகவே, ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் "பரிசீலிக்கப்படும்" என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்ததால், கண்டிப்பாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அன்புடன் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திட்டப்பட்டவை இத்திட்டங்கள். எனவே, உடனடியாக விரைந்து நடவடிக்கை எடுத்து முடிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

54—

பட்டு வர்த்தக மையம்

***759—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியில் பட்டு வர்த்தக மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2011 *ஆகஸ்ட்* 23]

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியில் பட்டு வர்த்தக மையம் அமைப்பது தொடர்பாக உரிய ஆய்வு செய்து, அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பின், பட்டு வர்த்தக மையம் அமைப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த ஆட்சியிலே பட்டு வர்த்தக மையம் அமைக்கின்றோம் என்கின்ற பெயரிலே ஓர் அறிவிப்பை வெளியிட்டு, அதைத் தொடர்ந்து அதிகாரிகளைக் கூட்டிச் சென்று நிலத்தையும் பார்வையிடுகிறோம் என்கின்ற பெயரிலே விளம்பரம் மட்டுமே தேடிக் கொண்டார்களே தவிர, அந்தப் பட்டு வர்த்தக மையம் அமைவதற்கு ஒரு சிறிய முயற்சிகூட மேற்கொள்ளப்படவில்லை. அதோடுமட்டுமல்லாமல் ஆரணி தொகுதி ஏதோ மாகேயிலோ, ஏனாமிலோ இருப்பதைப்போல, கடந்த தி.மு.க. ஆட்சியிலே எந்தவிதமான நலத் திட்டங்களும் ஆரணிக்கு வந்து சேரவில்லை. எனவே, மக்கள் நலனில் அக்கறையுள்ள இந்த அரசு, ஆரணி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான பட்டு வர்த்தக மையத்தை உடனே அமைத்துத் தர வேண்டும். ஏனெனில், ஏறத்தாழ 70,000 மக்கள் பயனடையக்கூடிய ஒரு நல்ல திட்டம் இது. அதைக் கொண்டு வந்து மக்களின் நலனிலே அக்கறையுள்ளதை மீண்டும் நிரூபித்துக் காட்ட வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியிலே 6 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றிலே 3 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அசல் சரிகையுடனும், 3 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில்* Half fine *சரிகையுடனும் பட்டுச் சேலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதற்குத் தேவையான பட்டு நூல், தமிழ்நாடு பட்டுக் கூட்டுறவு இணையத்தின் சார்பாக கிளை விற்பனை நிலையம் அமைத்து, அதன்மூலம் அவை ஆரணியில் வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு மிக்க நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ் அவர்கள்.*

திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர், பஞ்சிகாளைப்பட்டி, ஜலகண்டாபுரம், நங்கவள்ளி மற்றும் சேலம் மாநகரத்தையொட்டியுள்ள எல்லா இடங்களிலும் ஏறக்குறைய ஆயிரக்கணக்கான பட்டுத் தறிகள் உள்ளன. அதைப்போல, என்னுடைய சேலம் வடக்குத் தொகுதியில் உள்ள அம்மாப்பேட்டை பகுதியிலே தமிழகம் முழுவதற்கும் தேவையான பட்டு வேஷ்டிகள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. சேலம் நகரை ஒட்டியிருக்கின்ற 23 ஏக்கர் பரப்பளவுள்ள கூட்டுறவு நூற்பாலை பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கின்றது. கடந்தகால ஆட்சியாளர்களின் கண்களில் படாத ஒரே சொத்து அதுதான். அதிலே இந்த பட்டு வர்த்தக மையம் அமைக்கப்படுமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

2011 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கூட்டுறவு நூற்பாலையைத் திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிச்சயமாக எடுக்கப்படுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அங்கே பட்டு வர்த்தக மையம் அமைவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

55—

கூட்டுறவு உணவகங்கள்

***1734—திரு. இரா. காமராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைகளில் போக்குவரத்துக் கழகங்களின்மூலம் கூட்டுறவு உணவங்கள் நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில் பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது நிதிப் பற்றாக்குறையின் காரணமாக நெடுஞ்சாலைகளில் கூட்டுறவு உணவகங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் போக்குவரத்துக் கழகங்களிடம் இல்லை. வருங்காலங்களில் நெடுஞ்சாலைகளில் உணவகங்கள் அமைப்பது குறித்து நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*